International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தண்டபாணிசுவாமிகள் மற்றும் கந்தசாமிசுவாமிகளின் முருகன் மாலைகளில் வெளிப்படும் மெய்ப்பாடுகள்

**ஐ. சரண்யா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) பதிவு எண்:23TA403
**முனைவர் சு. சதீஷ்குமார்**
உதவிப் பேராசிரியர் (முதுநிலை) தமிழ்த்துறை (அரசு உதவி பெறும் பிரிவு) கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) கோயம்புத்தூர் – 641029

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் தன்னுடைய உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை மெய்யாகிய உடம்பின் வழி மற்றவருக்குத் தெரியப்படுத்துவது மெய்ப்பாடாகும். அந்த வகையில் புலவர்கள் தங்கள் வாழ்க்கையில் அனுபவித்த இன்பத்துன்பங்களை இலக்கியத்தின் வாயிலாக வெளிப்படுத்துவார்கள். அதனால் இலக்கியத்தில் இடம்பெறும் மெய்ப்பாடுகளின் தன்மைகளை நம்மால் உணரமுடிகிறது. இலக்கியம் தோன்றிய பிறகே அவற்றை அடிப்படையாக வைத்து இலக்கணம் தோன்றியது என்று அறிஞர்கள் கூறுவார்கள். அந்த வகையில் தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் அதற்கு முன்னர் தோன்றிய இலக்கியத்தின் அடிப்படையில் இலக்கணங்களை வகுத்துள்ளது. இலக்கியத்தில் இடம்பெற்ற உணர்ச்சிகளை எண்வகை மெய்ப்பாடுகளாகப் பகுத்துள்ளது. வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் பாடிய 9 முருகன் மாலை இலக்கியத்திலும் சிரவையாதீனம் கந்தசாமிசுவாமிகள் முருகன் மீது பாடிய 11 மாலை இலக்கியத்திலும் இடம்பெறும் எண்வகை மெய்ப்பாடுகளை ஒப்பிடும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**முதன்மைச் சொற்கள்**

மெய்ப்பாடு, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை.

**ஆய்வுநோக்கம்**

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மற்றும் சிரவையாதீனம் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் முருகன் மாலைகளில் தொல்காப்பியர் கூறியுள்ள எண்வகை மெய்ப்பாடுகளும் இடம்பெற்றுள்ளது என்னும் நோக்கில் ஆராய்வதே இவ்வாயின் நோக்கமாகும்.

**ஆய்வு அணுகுமுறை**

தண்டபாணி சுவாமிகள் மற்றும் கந்தசாமி சுவாமிகளின் முருகன் மாலைகளில் வெளிப்படும் மெய்ப்பாடுகள் என்னும் தலைப்பில் ஒப்பீடு ஆய்வும், விளக்கமுறை ஆய்வும், பகுப்பு முறை ஆய்வும் கையாளப்பட்டுள்ளது.

**முன்னாய்வுகள்**

தண்டபாணி சுவாமிகளின் பழனித்திருவாயிரம் - ஒர் ஆய்வு, அ.கோபிநாத்-2007

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அந்தாதி இலக்கியங்கள், எம். அனுராதா-2015

சிரவை கந்தசாமி சுவாமிகளின் பேரூர்ப் பனுவல்கள், திரு.ந.குமரகுருபரன்-2010

சிரவை கந்தசாமி சுவாமிகளின் தல புராணங்கள் ஆழ்நோக்கு ஆய்வு, ச.பத்மினி-2007

கொங்குநாடு கந்தசாமி சுவாமிகளின் காரமடைத் தல புராணத்தில் நாட்டுப் படலப் பாடல்கள், எஸ்.கவிதா -2022

**முன்னுரை**

சங்க இலக்கியம் தொட்டு இக்கால இலக்கியம் வரை மெய்ப்பாடு என்பது இலக்கியங்களில் இன்றியமையாததாக உள்ளது. இவற்றின் முக்கியத்துவம் கருதியே தொல்காப்பியரும் செய்யுள் உறுப்பு களில் ஒன்றாகக் கூறி உவமையியலுக்கு முன்னால் வைத்துள்ளார். இத்தகைய மெய்ப்பாடு தண்டபாணி சுவாமிகள் இயற்றிய முருகன் மாலைகளிலும் கந்தசாமி சுவாமிகள் இயற்றிய முருகன் மாலைகளிலும் இடம் பெற்று இலக்கியத்திற்கு மேலும் அழகு சேர்த்துள்ளது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**மெய்ப்பாடு என்பதன் விளக்கம்**

புலன்களின் வாயிலாக மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் இயற்கையான உணர்ச்சிகளின் உண்மையான வெளிப்பாடே மெய்ப்பாடாகும். இதனை “**மெய் என்பது உண்மை எனப் பொருள்படும், பாடு என்பது படுவது ஆகும். இப்பொருளில் மெய்ப்பாடு என்பதற்கு உள் உணர்ச்சிகளின் மெய்மை வெளிப்பாடு எனக் கூறலாம் மெய் என்பது உடல் என்றும் பொருள்படும் இப்பொருளில் உள்உணர்ச்சி களின் உண்மையான குறிகள் புறஉடலில் படுதல் எனவும் பொருள் கொள்ளலாம்** (கம்பரும் மெய்ப்பாட்டியலும், ப.6) என்று அறிஞர் கூறுகின்றார்.

**எண்வகை மெய்ப்பாடுகள்**

மனித உள்ளுணர்வுகளின் அடிப்படையில் புறஉடலில் வெளிப்படும் உணர்ச்சிகளை எண்வகை மெய்ப்பாடுகளாக தொல்காப்பியர் வகுத்துள்ளார். அவை, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற இவ்வெண்வகை மெய்ப்பாடுகளில் ஒவ்வொரு மெய்ப்பாடுக்கும் நான்கு நிலைக்களன்களாக மொத்தம் 32 நிலைக்களன்களைக் கூறியுள்ளார்.

**நகை**

மனிதனிடம் இயல்பாக வெளிப்படும் மெய்ப்பாடு நகை ஆகும். தன்னுடைய மகிழ்சியிலும் பிறரின் துக்கத்திலும் சிரிப்பது மனிதனின் இயல்பாக உள்ளது.

**“எள்ளல் இளமை பேதைமை மடன் என்று**

**உள்ளப்பட்ட நகை நான்கு என்ப”**

(தொல்., பொருள்., நூ.1119)

என்ற தொல்காப்பிய நூற்பா நகைக்குரிய நிலைக்களன்களைக் கூறியுள்ளது. சுவாமிகள் இருவரும் தங்கள் பாடல்களில் எள்ளல் என்ற நிலைக்களனை அடிப்படையாக வைத்து நகைத்தல் என்ற மெய்ப்பாடு பிறரிடம் தோன்றுவதாகக் கூறுகின்றனர்.

**"எத்தனை மானிட ரோஎனை**

**நாடொறும் எள்ளவி டுத்தனையே**

**அத்தனை பேரும்நின் அன்பன் எனப்புகழ் ஆண்மையை**

**ளித்தருள்வாய்"** (குஞ்சரிமாலை, ப.88)

என்ற பாடலில் தண்டபாணிசுவாமிகள் எத்தனையோ மனிதர்கள் என்னைப் பார்த்து தினந்தோறும் எள்ளி நகையாடிடும்படி விட்டு விட்டாயே, அத்தனை பேரும் உன்னுடைய அன்பன் என்று என்னைப் புகழ்ந்திடும்படி செய் என்று வேண்டுகிறார்.

**“.......... உன் அன்பருக்குள்**

**நானும் ஈங்கு ஒருவன் என்று அடியார்**

**சிரித்திடும்படி நின்று ஏங்கிடும், எனது**

**சிந்தையில் சிவ மண இன்பம்**

**விரித்திடும் பரஞானப் பொலிவு அருள்வாய்”** (குருந்தமலை வேலாயுதசாமி மாலை, பா. 95)

என்ற பாடலில் கந்தசாமிசுவாமிகள் முருகப் பெருமானே, நானும் உன்னுடைய அடியவன் தான் என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது உன்னுடைய அருளைப் பெற்ற அடியவர்கள் என்னைப் பார்த்து சிரிப்பதால் வருந்தி நிற்கும் என்னுடைய உள்ளத்தில் மங்களகரமான மகிழ்ச்சியைக் கொடுத்து உன்னைப் பற்றி அறியும் அறிவே அருள்வாய் என்று வேண்டுகிறார். தண்டபாணி சுவாமிகள் மனிதர்கள் எள்ளி நகைப்பாதாகவும் கந்தசாமி சுவாமிகள் அடியவர்கள் நகைப்பதாகவும் கூறி முருகப்பெருமானின் அன்பன் என்று கூறும் சிறப்பு தனக்கு வேண்டும் என்று தண்டபாணி சுவாமிகளும் முருகனையே அறியும் அறிவு தனக்கு வேண்டும் என்று கந்தசாமி சுவாமி களும் வேண்டியுள்ளதை உணரமுடிகிறது.

**அழுகை**

மனிதனால் தாங்கிக் கொள்ள முடியாத

துன்பத்தில் அழுகை என்னும் மெய்ப்பாடு தோன்றுகின்றது.

**இளிவே இழவே அசைவே வறுமை என**

**விளிவில் கொள்கை அழுகை நான்கே**

(தொல்., பொருள்., நூ.1199)

என்ற நான்கு நிலைக்களன்களைக் கொண்டு அழுகை பிறக்கும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இளிவு என்ற நிலைக்களனை வைத்து தண்டபாணி சுவாமிகளும் இழவு என்ற நிலைக்களனை வைத்து கந்தசாமி சுவாமிகளும் மெய்ப்பாடுகளை வெளிப் படுத்தியுள்ளனர்.

**"திமிரசாக ரம்பொருவு -சிந்தையாலே**

**தினமும் வாடி நொந்துமயல் மிஞ்சும் நீர்தோய்**

**தமியனேனெ டன்றுன் அருள்"**

(சித்தி மாலை, பா.18)

இப்பாடலில் தண்டபாணிசுவாமிகள் கடல் போன்று இருட்டாக இருக்கும் அஞ்ஞான இருள் நிறைந்த என் மனதினால் நாள் தோறும் நொந்து கண்ணீர் வடித்து நிற்கும் என்னை ஏற்றுக்கொண்டு அருள் வழங்கு என்று முருகப்பெருமானை வேண்டுகிறார்.

**"நான் இறக்கும் ஓர் இழவுநாள் ஒருகால் நினையேன்**

**ஞாலமிசை இறந்தவர்க்காச் சால்அழுது இளைப்பேன்"**(வேற்கடவுள்மாலை, பா.32)

என்ற பாடலில் கந்தசாமி சுவாமிகள் இவ் வுலகில் பிறவி எடுத்து வந்த எவ்உயிருக்கும் இறப்பு என்பது உண்டு அவற்றில் நானும் ஒருவன் என்று அறியாமல் உலகில் எனக்கு முன்னால் இறந்தவர்களுக்காக மிகவும் வருந்தி அழுதுக்கொண்டிருக்கிறேன் என்கிறார்.

ஆணவம் நிறைந்த மனதினால் தினந்தோறும் பிறரால் இழிவுப்படுத்தப்பட்டு கண்ணீர் வடிப்பதாகத் தண்டபாணி சுவாமிகளும் பிறரின் இறப்புக்காகக் கண்ணீர் வடிப்பதாகக் கந்தசாமி சுவாமிகளும் கூறியிருப்பது தெளிவாகிறது

## இளிவரல்

அழுகையும் இளிவரலும் நெருங்கிய தொடர்பு உடையன. அதனால், தொல்காப்பியர் அழுகைக்கு அடுத்த நிலையில் இளிவரலை வைத்துள்ளார்.

**“மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு**

**யாப்புற வந்த இளிவரல் நான்கே"**

(தொல்., பொருள்., நூ. 1200)

என்ற நிலைக்களன்களைக் கொண்டு இளிவரல் சுவை ஏற்படுவதாகத் தொல்காப்பி யம் கூறுகின்றது. மூப்பு என்ற நிலைக் களனைச் சுவாமிகள் இருவரும் விளக்கியுள்ளனர்

**“நரையால்வெ ளுத்த உடல் திரைந்து வீணினில் மடியாதே**

**நவநாத சித்தரொடு கலந்து வாழ்வுற - அருள்வாயே”** (சித்திமாலை, பா. 11)

என்ற இப்பாடல் அடிகளில் தண்டபாணி சுவாமிகள் நரையால் முடிவெளுத்து உடல் சுருங்கி நான் வீணாக இறந்து போகாமல் அனைத்து சக்திகளையும் கை வரப்பெற்ற ஒன்பது வகையான சித்தருள் என்னைச் சேர்ந்தருள் என்று முருகப்பெருமானை வேண்டுகிறார்.

**"மூப்பு வந்து இருமி "கிழப்பிணமே! இம்**

**மூலையில் கிடந்து ஒழி"என்றே**

**கோப்பு உறுமடவார் நகைத்து இகழாமுன்**

**குளிர் சடாக்கரத்தை உள்அன்பால்**

**நாப் புகன்றிட நின் திருவடி கருதி**

**நயனம் நீர் பொழிய உச்சியில்கை**

**கூப்புமாறு அருள்வாய்"** (குருந்தமலை வேலாயுதசாமி மாலை, பா.50)

**"நரை திரை மூப்பு ஆம் புரை நிறை உடலை**

**நான் எனக் கருதி அங்கு அதற்கு ஆம்**

**இரை கொளத் தீவாந்தரம் புகுந்து இளைப்பேன்"**

(பழனி தண்டபாணியன் மாலை, பா. 36)

ஆகிய பாடலில் கந்தசாமி சுவாமிகள் முதுமைக் காலத்தில் இருமிக் கொண்டி ருக்கும் போது இளமையுடைய பெண்கள் கிழப்பிணமே ஒருமூலையில் கிடந்து ஒழி என்று சொல்லி என்னைப் பார்த்து சிரிக்கும் நிலைக்கு ஆளாகாமல் இளமைக்காலத்தி லேயே இருந்து உன்னுடைய ஆறெழுத்து மந்திரத்தைச் சொல்லி உன் திருவடியை நினைத்து என் இரு கண்களில் இருந்தும் நீர் பொழிந்து இரண்டு கைகளையும் கூப்பி வணங்க அருள வேண்டும் என்றும் நரைத்து தோல் சுருங்கி முதுமை அடைந்து குற்றம் மிக்க உடலை நான் எனக் கருதி அதற்காக உணவு கொள்ளப் பல்வேறு தீவுகள் பொருந்தி வருந்துகிறேன் என்று முருகப்

பெருமானை வேண்டுகிறார். நரை மற்றும் மூப்பால் உடல் அடையும் மாற்றத்தைச் சுவாமிகள் இருவரும் கூறியிருந்தாலும் மூப்பால் இறந்து போகாமல் சித்தரோடு சேர்க்க வேண்டும் என்று தண்டபாணி சுவாமிகளும் ஆறெழுத்து மந்திரத்தை இளமை முதலே சொல்ல வேண்டும் என்று கந்தசாமி சுவாமிகளும் முருகப்பெருமானிடம் வேண்டுதை அறிய முடிகின்றது.

**மருட்கை**

மருட்கை என்பது வியத்தலால் உள்ளத்தில் ஏற்படும் மெய்ப்பாடாகும்

**"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**

**மதிமை சாலா மருட்கை நான்கே"**
(தொல்., பொருள்., நூ. 1201)

என்ற தொல்காப்பிய நூற்பா மருட்கை சுவை தோன்றும் நிலைக்களன்களைக் கூறியுள்ளது. சுவாமிகள் இருவரும் புதுமை என்ற நிலைக் களனை அடிப்படையாக வைத்து முருகப் பெருமானின் கருணையைப் புதுமையாகச் சொல்லித் தாங்களும் வியந்து இம்மாலை யைப் படிப்போரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளனர்.

**"திட்டும வர்க்கும்இ ரங்கிய**

**சீர்திகழ் செந்தில்வி சாகன்"**
(குஞ்சரி மாலை, பா.100)

**காணரும் கண்டவர் போற்புகழ் கந்தன்**
(திருப்புயமாலை, பா.9)

இப்பாடல்களில் தண்டபாணி சுவாமிகள் தன்னைத் திட்டுவோருக்கும் இரங்கி முருகப் பெருமான் நல்ல அருளைப் புரியக்கூடியவன் என்றும் அவனைக் காணாதவரையும் போற்ற வைப்பவன் என்றும் கூறி முருகப்பெருமா னின் கருணைத் திறனை எண்ணி வியக்கின்றார்.

**"வஞ்சமே உடையார் பார்க்கினும் அவர்தம்**

**மனதினைத் தன்வசம் ஆகச்**

**செஞ்சவே புரியும் இரத்தின கிரிவாழ்**

**சிற்குணா! சற்குரு மணியே!"** (இரத்தினகிரி குருமணிமாலை, பா.19) இப்பாடலில் கந்தசாமிசுவாமிகள் வஞ்சத்தை மனதில் வைத்துக் கொண்டு உன்னை வந்து பார்த்து வழிபடுபவர்களின் மனதினையும் உன்வசம் ஆக்கிவிடுகின்றாயே என்று முருகப் பெருமானை வியந்து பாடுகிறார். தன்னைத் திட்டுவோர்களை மன்னிக்கும் மனப்பான்மை அற்ற உலகில் முருகப்பெருமான் தன்னைத் திட்டுவோர்களுக்கும் அருள்பவன் என்றும் தன்னைக் காணாதவரையும் கண்டவர் போல போற்ற வைப்பவன் என்று தண்டபாணி சுவாமிகளும், வஞ்சம் நிறைந்தவரின் மனநிலை யும் முருகப்பெருமான் தன் வசம் ஆக்கி விடுகிறான் என்று கந்தசாமி சுவாமிகளும் குறிப்பிட்டுள்ளது தெளிவாகின்றது.

**அச்சம்**

அனைத்து மனிதர்க்குள்ளும் அச்சம் என்பது அவரவர் உள்ளத்தில் வெளிப்படக்கூடிய மெய்ப்பாடாகும்.

**"அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்**

**பிணங்கல் சாலா அச்சம் நான்கே"**
(தொல்., பொருள்., நூ.1202)

என்ற நூற்பா அச்சம் தோன்றுவதற்குரிய நிலைக்களன்களைக் குறிப்பிடுகிறது. **அச்சம் என்றவுடன் மனத்திண்மையின்றி எதனைச் செய்தற்கும் அஞ்சியொடுங்கும் கோழைமை என்பது பொருளாகாது. பழிபாவங்கட்கு அஞ்சும் பண்பே அச்சம் எனப்படுகிறது** (அகத்தில் மகளிர் பா.24) என்ற அறிஞரின் கருத்துக்கு இணங்க சுவாமிகள் இருவரும் அணங்கு என்ற நிலைக்களனை வைத்து பேய் போன்ற உலகத்தில் பிறந்து செய்யும் வினைகளால் கிடைக்கும் துன்பத்திற்கு அஞ்சுகின்றனர்.

**"இன்னம் கலிப்பேய் எனைப்புண் படுத்தாமல்**

**தன்னந் தனிப்பெருமை**
**சாற்றிஆள்"** (வெண்பாமாலை, பா. 58)

என்ற பாடலில் தண்டபாணி சுவாமிகள் பேய் போன்ற உலகத்தில் பிறக்கச் செய்து என்னைத் துன்பப்படுத்தாமல் தனிப் பெருமையைக் கொடுத்து ஆட்கொள் முருகப்பெருமானை என்று வேண்டுகிறார்.

**சுட்டிடும் அலகை உலகை உள் எண்ணில்**

**துடிதுடித்திடும் எனை, மீட்டும்**

**தொட்டிட புரிவது என்வினையோ**
(இரங்கசாமி கவுண்டன் புதூர்மாலை, பா.25)

**"மகவுக்கு வேண்டும் பொருள் தேடி**

**வைத்து அழிவார்க்கு உரித்து ஆம்**

**சுகம் உற்ற வாழ்வில் எனை வைத்-**

**திடாது, நின் தாள் ஒளி தோய்**

**சுகம் உற்று, ஞான சொருபத்து**

**இரண்டு அறத் தோய்த்து, அருள்வான்**

**மிக நத்தினேன்: சற்று இரங்காய்**

**கதிர் வடிவேல்த் தெய்வமே"** (வேற்றெய்வ மாலை, பா.15)

ஆகிய பாடல்களில் கந்தசாமிசுவாமிகள் என்னை வருத்திடும் பேய்த்தன்மை வாய்ந்த உலகத்தை எண்ணும்போதே உள்ளம் துடிதுடிக்கின்றேன் அப்படிப்பட்ட என்னை இந்த உலகத்தில் மீண்டும் பிறக்கச் செய்ய மால் உன் உருவத்துடன் இரண்டறக் கலக்க மிகவும் விரும்பினேன் சற்றும் இரங்குவாய் என்று முருகப்பெருமானை வேண்டுகிறார். தண்டபாணி சுவாமிகள் இவ்உலகில் தனக்குத் துன்பம் ஏற்படாமல் தனிப் பெருமையைக் கொடுக்க வேண்டும் என்றும் கந்தசாமி சுவாமிகள் இவ்வுலகில் பிறப்பை வேண்டாம் என்று முருகப்பெருமானிடம் வேண்டுவதும் புலனாகிறது. இரண்டு பாடல் களிலும் ஒன்றில் உருவத்துடன் இரண்டறக் கலத்தல் மற்றொன்றில் பிறவி வேண்டாம். இரண்டிலும் வேறுபாடுகள் காணப்படுகின் றன.

### பெருமிதம்

மனிதனுக்குக் கல்வியாலும் வீரத்தாலும் பிறருக்குக் கொடுக்கும் கொடையாலும்ம் பிறர்தன்னைப் பாராட்டும் பொழுது பெருமிதம் என்ற மெய்ப்பாடு தோன்றும் என்பதை,

**"கல்வி ஊற்றுக்கண் இசைமை கொடைஎனச்**

**சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"** (தொல்., பொருள்., நூ. 1203)

என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியமுடிகின்றது. சுவாமிகள் இருவரும் கொடை என்ற நிலைக்களனை வைத்து முருகப் பெருமான் தங்களுக்குப் பாடும் ஞானத்தை அளித்தான் என்று முருகப் பெருமானின் கொடைத்தன்மையைக் கூறிப் பெருமைப்படுகின்றனர்.

**"ஆனாத விளையாடல் செய்திட்டு**
**இழித்துத்தன் அருகுய்த்து நல்**

**தேனார் தமிழ்ப்பாடல் வனையச்செய்**
**கின்றன் மெய், சிவனாணையே"** (நவமணி மாலை, பா. 23)

என்ற பாடலில் தண்டபாணி சுவாமிகள் முருகப்பெருமான் அனேக திருவிளையாடல் புரிந்து அருள்கொடுத்து நல்ல தேன்போன்ற தமிழ்ப்பாடலைப் பாடச் செய்கின்றான் இது உண்மை சிவன் மீது சத்தியம் என்று பெருமிதமாகக் கூறுகின்றார். கல்வி என்னும் கொடை இறைவனால் வழங்கப்பட்டுள்ளது.

**"பழிபடுபா வங்கள்என்பால்ச் சிறிதும் உறா வண்ணம்**

**பரந்தமைநின் மெய்ப்புகழைப் பாடிஅகம் கனிந்து**

**வழிபடுமா தவம் அளித்தார், இது கருதி உள்ளம்**

**மகிழ்கின்றேன்........"** (சவுரிபாளையம் சுப்பிரமணிய மாலை, பா. 5)

**"மதி இசைந்த சிறு பருவம் தொட்டு உனது பதமே**

**மனத்தகத்தை பதித்து உருகி, வணங்கி, அரும் தமிழால்**

**துதி இசைந்து பாடி பாடி ஏத்தெடுக்க உள்ளத்**

**துணிவு அளித்து, அவ்வாறு இயற்றத் துணை புரிந்தே உண்மைக்**

**கதி இசைந்த தொண்டர் புகும் நெறி அகத்தில் காட்டும்**

**கருணை உடையாய்க்கு இயற்றும் கைமாறு ஒன்று**
**உள்ளதோ?"** (சிரவணபுரம் குமரகுருபர கடவுள் மாலை, பா.2)

ஆகிய பாடல்களில் கந்தசாமிசுவாமிகள் முருகப்பெருமானின் புகழைப் பாடி உள்ளம் மகிழ்ந்து வழிபடும் மாதவத்தை அளித்தான் என்று பெருமிதப்படுகின்றார். தண்டபாணி சுவாமிகள் முருகப்பெருமான் பாடும் ஞானத்தை அளித்தான் என்று சிவன் மீது சத்தியம் செய்வதையும் கந்தசாமி சுவாமிகள் அவனைப் பாடும் மாதவத்தைக் கொடுத்தான் என்று கூறியுள்ளதையும் அறியமுடிகின்றது. தண்டபாணி சுவாமிகள் முருகனிடம் பெற்றதைச் சிவனை சாட்சியாக வைத்து நிரூபித்துக் காட்டுகிறார்.

### வெகுளி

வெகுளி என்பது சினத்தால் உடலில் தோன்றும் மெய்ப்பாடாகும். கோபத்தின் உச்சிக்குச் சென்ற மனிதர்கள் பிறரின் உறுப்புகளை வெட்டிக் கொல்லும் அளவிற்குச் சென்று விடுகின்றனர்.

**"உறுப்பறை குடிக்கோள் அலைகொலை என்ற**

**வெறுப்ப வந்த வெகுளி நான்கே"** (தொல்., பொருள்., நூ. 1204)

என்ற நூற்பா வெகுளி தோன்றுவதற்குரிய

நிலைக் களன்களைக் கூறுகின்றது. ஆனால், புலவர்களின் கோபம் சற்று வித்தியாசமானது சமுதாயத்தில் நடக்கும் கொடுமைகளைப் புலவர்கள் தங்கள் பாடலின் மூலம் வெளிப் படுத்துவார்கள். அதுபோலவே தண்டபாணி சுவாமிகளும், கந்தசாமிசுவாமிகளும் கொலை என்ற நிலைக்களனை வைத்து ஐந்தறிவு படைத்த உயிர்களைக் கொன்று உண்ணும் மனிதர்களைப் பார்த்து கோபம் கொள்கின் றனர். அக்கோபத்தைத் தங்கள் இலக்கியங் களிலும் வெளிப்படுத்தியுள்ளனர்.

**"ஆரண நூலின் பயனறி யாமல் அழல்மகத்தில்**

**சீரண வுந்தகர் கொல்வாரை யாவன் திருத்துவனோ"** (கந்தநாயக மாலை, பா.21)

**"ஆரண நுட்பம் தெரிந்தோ மென**

**மேடம தைக் கொன் றுவெந்தூன் நுகர்**

**ஆசுபொ றுக்கின் றவம்பாளர்கள்**

**பின் செலாதே"** (பன்னிருபா மாலை, பா.12)

**ஆடுண்ணுவார்க்கு உன் கை**

**வேலுடன் நீ இவண் அஞ்சுகின்றாய்**

**மாடுண்ணுவாரை வென்று உய்யும்**

**மெய்வாழ்வு எந்தவாறு அருள்வாய்**

(நிட்டூரமாலை, பா. 4)

**ஏனம், ஆடு, எருமையா தியகொன்று**

**இவ்வழி பாடே நலமெனப் பகர்வார்**

**எவரையும் அடவலான் எவனோ?**

(குருபரமாலை, பா. 49)

ஆகிய பாடல்களில் தண்டபாணி சுவாமிகள் வேத நூல்களின் பயன் அறியாமல் வேள்வி களில் ஆட்டைக் கொல்கின்றவர்களை முருகப்பெருமானை எவன் வந்து திருத்து வானோ உன் கையில் வேல் இருந்தும் ஆடு உண்பவர்களைப் பார்த்து நீ அஞ்சு கின்றாயே மாடு உண்ணும் பாவிகளை வெல்லும் மெய் வாழ்வை எவ்வாறு நீ அருளப் போகிறாய் என்று சற்றுக் கடின மாகவே உயிர்க் கொலையை எதிர்த்துக் கோபப்படுகின்றார்.

**"கோ வதைத்து ஊன் உண்டு உவக்கும் கொடியவர் பாழ் மனையில்**

**குப்பை எனக் குவிந்து உறுபொற் குவியல், உனது அம்பொன்**

**சேவடி தாழ்ந்து அறத்துறைசேர் புண்ணியர்க்குப் புலிபால்த்**

**திறம் அமைதல் அறமோ? பின் திருவுளம் ஒப்பதுவோ?"**

(உடையம்பாளையம் தண்டபாணி அருட்குருமாலை, பா. 17)

**"கூற்றம் என உயிர் வதைத்து ஊன் உண்டு தேக்கும்**

**கொடியார் இறுமாந்து குதூகலிக்க, நின் தாள்**

**போன்று அடியார் செய்வகை ஒன்று அறியாது உள்ளம்**

**புழுங்கு செயல் உனக்கு ஓர் இறும்பூது கொல்லோ?''**

(கீரநத்தம் தண்டபாணி மாலை, பா. 13)

ஆகிய பாடல்களில் கந்தசாமிசுவாமிகள் உயிர்களைக் கொன்று அதனின் சதைகளை உண்டு வாழும் கொடியவர்கள் எல்லாம் மகிழ்ச்சியுடன் இருக்க உன் பாதத்தைப் போற்றும் அடியவர்கள் எல்லாம் வருந்துகின் றனரே இதைத்தான் உன் திருவுள்ளமும் நினைக்கின்றதோ என்று கோபமாக முருகப் பெருமானிடம் வினாவுகின்றார். தண்டபாணி சுவாமிகள் இச்சமுதாயத்தில் உயிர்க்கொலை புரிபவர்களை முருகப்பெருமான்தான் திருத்த முடியும் என்றும் கந்தசாமி சுவாமிகள் உயிர்க்கொலை புரிபவர்கள் மகிழ்வுடன் இருப்பதாகவும் அடியார்கள் வருந்துவதாகவும் கூறியிருப்பது இன்றைய காலக்கட்டத்துக்கும் பொருந்துவதாக உள்ளது ஏனென்றால் தீயவர்கள் நன்றாக வாழ்வதும் நல்லவர்கள் வீழ்வதால் வருந்துவதும் இன்றும் நடந்துக் கொண்டுதான் இருக்கிறது. இறைவன் உயிர்க் கொலைகளை ஏற்பது இல்லை. மனிதன் இறைவன் பெயரைச் சொல்லி உயிரைக் கொல்கிறான். அனைத்து உயிர்களும் இறைவனுக்குப் பொதுவானது ஆகும்.

**உவகை**

உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சியின் அடிப்படையில் தோன்றும் மெய்ப்பாடாகும்.

**"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று**

**அல்லல் நீத்த உவகை நான்கே"** (தொல்., பொருள்., நூ. 1205 )

என்று தொல்காப்பிய நூற்பா மகிழ்ச்சி ஏற்படுவதற்கான நிலைக்களன்களைக் குறிப் பிடுகின்றது. சுவாமிகள் இருவரும் புலன் என்ற நிலைக்களனை வைத்துப் பாடியுள்ள னர். ஐம்புலன்களால் தண்டபாணி சுவாமிகள்

முருகப்பெருமானுக்கு வழிபாடு செய்வதனால் மகிழ்வதாகக் கூறுகின்றார். கந்தசாமி சுவாமிகள் முருகப்பெருமானின் அருள் திறனை ஐம்புலன்களை ஒரு நிலைப்படுத்தி மனதார நினைக்கும் போது மகிழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**"கானொன்று மலர்சிந்தும் வழிபாடு பலநாள் களிற்செய்தலின்**

**வேனொன்று பழனிக் கிரிச்சார லிடைவைகும் விரகுற்றதே"** (நவமணி மாலை, பா.77)

என்ற பாடலில் தண்டபாணி சுவாமிகள் மலர்த் தூவி வழிபாடுகளை நான் மகிழ்ச்சி யுடன் பலநாள் செய்ததால் பழனி மலையில் இருக்கும் முருகப்பெருமானை நான் காணப் பெற்றேன் என்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

**"அகண்ட பரிபூரணமாய் நிறை என்**

**அப்பா! உன் பேர் அருட்சீர் அகம் கருதி, உவகை கூடுகின்றேன்........** (குணியமுத்தூர் குருபரன் மாலை, பா.6)

என்ற பாடலில் கந்தசாமி சுவாமிகள் உலகம் எங்கும் முழுமையாக நிறைந்திருக்கும் என் அப்பனே உன்னுடைய அருள்திறத்தை நினைத்து மகிழ்ச்சியுடன் உன்னை வந்து சேர்கிறேன் என்று என்கிறார். தண்டபாணி சுவாமிகள் முருகப்பெருமானை மகிழ்ச்சியுடன் வழிபட்டதாகவும் கந்தசாமி சுவாமிகள் முருகப்பெருமானின் அருள் தன்மையை எண்ணி மகிழ்ச்சியுடன் அவனைச் சேர்ந்தததா கவும் கூறியுள்ளதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

## முடிவுரை

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 9 முருகன் மாலைகளிலும் கந்தசாமி சுவாமி களின் 11 முருகன் மாலைகளிலும் தொல்காப்பியம் கூறும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எண்வகை மெய்ப் பாடுகளும் சுவாமிகள் அனுபவித்த இன்பத் துன்பங்களின் அடிப்படையில் வெளிப்பட்டு உள்ளதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

## ஆய்வின் பயன்

தண்டபாணி சுவாமிகள் மற்றும் கந்தசாமி சுவாமிகளின் முருகன் மாலைகளில் பக்தி உணர்வின் பொருட்டும் சமூக நல அக்கறையாலும் சுவாமிகளிடத்தில் மெய்ப் பாடுகள் வெளிப்பட்டுள்ளன. அதலால் இவ்விலக்கியத்தைப் படிப்போர்கள் சமுதாயத்தில் அடுத்தவரை எள்ளி நகை யாடமாலும் பிற உயிரைக் கொல்லமாலும் ஆன்மிக நாட்டத்துடன் வாழ வேண்டும் என்பது ஆய்வின் பயனாகும்.

## எதிர்கால ஆய்வுகள்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மற்றும் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் முருகன் மாலைகளில் வெளிப்படும் தலச் சிறப்புகள்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மற்றும் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் முருகன் மாலைகளில் வெளிப்படும் மெய்யியல் கருத்துகள்.

## துணைநூற்பாட்டியல்

1. அருள்மிகு தண்டபாணி சுவாமிகள், திருச்செந்திற்பிரபந்தங்கள், சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் வெளியீடு, திருச்செந்தூர், முதற்பதிப்பு - 1969.
2. அருள்மிகு தண்டபாணி சுவாமிகள், திருவிளக்காயிரம், திருவண்ணாமலை சமயப்பேரவை வெளியீடு, முதற்பதிப்பு - 1984.
3. கோதண்டபாணிபிள்ளை. கு, கம்பரும் மெய்ப்பாட்டியலும், அனுராதா அச்சகம், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை -21, முதற்பதிப்பு - 1971.
4. தமிழண்ணல், தொல்காப்பிய மூலமும் கருத்துரையும், செல்லப்பா பதிப்பகம், மதுரை-625001, ஆறாம்பதிப்பு - ஜனவரி 2021.
5. தவத்திரு கந்தசாமிசுவாமிகள், தவத்திரு கந்தசாமிசுவாமிகள் பனுவல் திரட்டு, தொகுதி-1, சிரவைக் கௌமாரசபை வெளியீடு, முதற்பதிப்பு - 2021.
6. ராதாதியாகராஜன், அகத்தில் மகளிர், வானதி பதிப்பகம், சென்னை-17, முதற்பதிப்பு - டிசம்பர், 1992.
7. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், நீட்டுரமாலை மூலமும் உரையும், GAMS பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு -1992.
8. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பழனித்திருவாயிரம், அருள்மிகு தண்டபாணி சுவாமி திருக்கோயில் வெளியீடு, முதல் பதிப்பு -1973.